# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 0138/2017/பேரூ–2**

**ஆணை எண்: 306/2017**

**நாள்: 27/12/2017**

திரு. சி. ராஜவேலு,
தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம்,
எச். 4, பாலார் கார்டன், சத்தவாச்சாரி,
வேலூர் – 632 009. **– முறையீட்டு மனுதாரர்**

செயல் அலுவலர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். **– எதிர் மனுதாரர்**

## ஆணை

முறையிட்டு மனுதாரர் திரு. சி. ராஜவேலு என்பவரது 19.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு, 21.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண். 0138/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில் உதயேந்திரம் பேரூராட்சியின் பொது சுகாதார மேற்பார்வையாளர் திரு. ஞானமணி சுகாதாரப் பணிகளுக்கான பொருட்களின் தேவைப் பட்டியல்களில் தன்னுடைய கையெழுத்தை முறைகேடாக போட்டுள்ளார்கள் என தன்னிடம் புகார் அளித்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சிக்கு பொருட்கள் சப்ளை செய்யாமல் மொத்த தொகை ரூ.35,395/–க்கு மொத்தம் 4 காசோலைகள் வழங்கி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், பொது சுகாதார மேற்பார்வையாளரது கையெழுத்தை போலியாக செயல் அலுவலர் திரு. கோபால்

என்பவரால் போடப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் புகார் தெரிவித்துள்ளார். மோசடி செய்த செயல் அலுவலர் திரு. க. கோபால், உதவியாக இருந்த திருமதி. கம்சலா, இளநிலை உதவியாளர் மற்றும் தனி அலுவலர் திரு. Y. நிஷாத் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு முறையீட்டு மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி முறையீட்டு மனுவுடன் வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ள ஆவண நகல்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன.

(i) திரு. ந. ஞானமணி பொதுசுகாதார மேற்பார்வையாளர் முறையீட்டு மனுதாரர் திரு. ராஜவேலு என்பவருக்கு வழங்கிய 3.6.17 நாளிட்ட கடிதம்.

(ii) உதயேந்திரம் பேரூராட்சியின் வங்கி பட்டுவாடா பட்டியல்கள் Bank Payment Vouchers.

1) எண். 77 நாள்: 3.5.17 ரூ.8,700/–

2) எண். 76 நாள்: 3.5.17 ரூ.8,925/–

3) எண். 88 நாள்: 4.5.17 ரூ.8,870/–

4) எண். 89 நாள்: 4.5.17 ரூ.8,900/–

(iii) திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளரது பெயரில் செயல் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ள பொது சுகாதார பணிகளுக்கான பொருட்களின் தேவைகுறித்த கடிதம் நாள் : 28.04.2017, தெரு விளக்கு பராமரிப்பு உதிரி பொருட்கள் தேவை கடிதம் நாள்: 28.04.17, மற்றும் பொது சுகாதார பணிகளுக்கான பொருட்கள் தேவைக் கடிதம் நாள்: 03.05.17.

(iv) மேற்படி பொருட்கள் பெறப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு பயன்படுத்தப்பட்டமைக்கான சான்று கடிதங்கள் மூன்று நாள்: 05.05.17.

இதனிடையே முறையீட்டு மனுதாராது புகார்கள் குறித்து தக்க பதலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கும், தனி அலுவலருக்கும் இம்முறைமன்ற நடுவம் அறிவிப்பாணை நாள்: 23.06.17ன் மூலம் ஆணையிடப்பட்டது. அதன்படி பள்ளிகொண்டா பேரூராட்சியின் செயல் அலுவலரும், உதயேந்திரம் பேரூராட்சியின் தனி அலுவலராக கூடுதல் பொறுப்பு வகிப்பவருமான திரு. நிஷாத் என்பவர் கீழ்க்கண்டவாறான தனது 07.07.2017 நாளிட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"...தனி அலுவலர் பொறுப்பில் திட்ட நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிப்பது, பேரூராட்சியின் வளர்ச்சி நடவடிக்கைகளை கண்காணிப்பது மற்றும் பேரூராட்சியின் வரவு செலவு இனங்களை பார்வையிட்டு அனுமதிப்பது எனது பணியாகும்.

- புகார் மனுவில் 4 காசோலைகள் மூலம் ரூ.35,395/– தவறாக செலவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது தவறான குற்றச்சாட்டாகும். இத்தொகைக்கு பொருட்கள் சப்ளை பெறப்பட்டுள்ளது குறித்து சம்மந்தப்பட்ட பதிவேடுகள் உண்மைத்தன்மை என்னால் ஆய்வு செய்யப்பட்டதில் புகார் மனு அளித்த திரு. ஞானமணி என்பவரே அதனைப் பெற்று பயன்பாடு செய்தமைக்கும் அவரே சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்துள்ளார்...".

உதயேந்திரம் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. ஆனந்தன் அவர்கள் சமர்ப்பித்துள்ள 12.07.17 நாளிட்ட அறிக்கையிலும், மனுதாரர் புகாரில் தெரிவித்த காசோலைகளுக்கான பொருட்கள் பெறப்பட்டு பயன்படுத்தியமைக்கான ஒப்புதலை துப்புரவு மேற்பார்வையாளர் திரு. ஞானமணி என்பவரே அளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்போதைய செயல் அலுவலர் திரு. கோபால் என்பவருக்கும் திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளருக்கும் நிர்வாக பணிகளில் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறான பொய்யான தகவலை அளித்துள்ளாரெனவும் இதில் உண்மை ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளர் தான் சுகாதார பொருட்கள் மற்றும் தெரு விளக்குகள் பராமரிப்புக்கான உதிரி பொருட்களுக்கான தேவைக் கடிதத்தினை செயல் அலுவலரிடம் கொடுத்து, சப்ளை செய்யப்படும் பொருட்களை பயன்படுத்தி, பயன்படுத்தப்பட்டமைக்கான ஒப்புதலையும் அளித்து வருகிறார் எனவும் உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து விசாரிக்கும் பொருட்டு உதயேந்திரம் பேரூராட்சி, செயல் அலுவலர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் திரு. ஞானமணி ஆகியோர் 23.10.17 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.8.17 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி விசாரணைக்கு ஆஜரான திரு. ந. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளர் தனது வாக்குமூலத்தினை வாய்மொழியாகவும், எழுத்து பூர்வமாகவும் பதிவு செய்துள்ளார். அதில் தான் தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர் சங்க செயலாளர் திரு. ராஜவேலு என்பவரிடம் மே மாதத்தில் ஒரு கடிதம் கொடுத்ததாகவும் அதில் தன்னுடைய கையொப்பத்தை பொருட்கள் தேவைக் கடிதத்தில் யாரோ போட்டுள்ளார்கள் என புகார் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். பொருட்கள் எல்லாம் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டன எனவும் காசோலை உரிய நிறுவனத்தாரிடம் சேர்ந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். திரு. கோபால், செயல் அலுவலர் சில பிரச்சனைகளுக்காக தன்னை 15 நாட்கள் தற்காலிக பணி நீக்கம் செய்துவிட்டு பின்னர் அவரே பணியில் சேர்த்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். அலுவலுகத்தில் பணிபுரியும் திருமதி. கம்சலா இளநிலை உதவியாளர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் தன்னால் சொல்லப்படவில்லை எனவும் அவர் எந்தவித முறைகேடான நடவடிக்கைக்கும் உட்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தன்னை தற்காலிக பணிநீக்கம் செய்துவிட்ட செயல் அலுவலரை கொஞ்சம் மிரட்டுமாறு திரு. ராஜவேலு அவர்களிடம் சொன்னதாகவும் ஆனால் அவர் இதுபோன்ற ஒரு புகார் மனுவை அனுப்பி விட்டார் எனவும் தெரிவித்துள்ளார். அப்பொழுது செயல் அலுவலராக இருந்த திரு. கோபால் என்பவர் தனது கையெழுத்தை போடவில்லை என்றும் தற்பொழுது அவர்களிடையே எந்தப் பிரச்சனையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், முறையீட்டு மனுதாரரது புகார் மனுவுடன் இணைத்து வரப்பெற்ற, பொருட்கள் தேவைக் கடிதத்திலும், பட்டியல்களிலும் கூறப்பட்டுள்ள பொருட்கள் பெறப்பட்டு இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டு, பயன்படுத்தப்பட்டமைக்கான 05.05.2017 நாளிட்ட தன்னால் அளிக்கப்பட்ட மூன்று சான்று கடிதங்கள் குறித்து எந்தவித ஆட்சேபனையும் மேற்படி பணியாளரால் எழுப்பப்படவில்லை. மேலும், அச்சான்றுகளில் தான் உறுதி அளித்துள்ளவாறு அனைத்துப் பொருட்களும் தன்னால் பெறப்பட்டு பொது சுகாதாரம் மற்றும் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் உறுதிபடத் தெரிவித்தார்.

பேரூராட்சி தரப்பில் ஆஜரான திருமதி. வே. கம்சலா இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில், புகாரில் குறிப்பிட்டுள்ள பொது சுகாதார / தெருவிளக்கு உதிரி பாகங்கள் தேவைக் கடிதங்களில் துப்புரவு மேற்பார்வையாளரது கையெழுத்தை வேறு எவரும் போடவில்லை என்றும் திரு. ஞானமணி சுகாதார மேற்பார்வையாளர் அவரே தான் போட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். எந்த நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கப்பட்டதோ அந்த நிறுவனத்துக்கு காசோலை அனுப்பப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், புகாரில் குறிப்பிட்டுள்ள பொருட்கள்

பெறப்பட்டு, இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டு உரிய குறிப்புகள் செய்யப்பட்டு துப்புரவு ஆய்வாளரால் கையொப்பம் இடப்பட்டு பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சம்பந்தப்பட்ட இருப்பு பதிவேட்டினையும் முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு உட்படுத்தி ஒரு பிரதியினை சமர்ப்பித்துள்ளார். மேலும், முன்னாள் செயல் அலுவலர் திரு. கோபால் என்பவருக்கும் துப்புரவு மேற்பார்வையாளருக்குமிடையே பணி நிமித்தமாக அடிக்கடி பிரச்சனைகள் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளர் முன்னிலையில் மேற்படி பதிவேடுகள் பரிசீலிக்கப்பட்டு அதிலுள்ள கையொப்பங்கள் அவருடையது தான் என்பது குறித்தும் உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, திரு. ஞானமணி துப்புரவு மேற்பார்வையாளர் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு ஆஜராகி அளித்துள்ள சாட்சியம் / வாக்குமூலத்தை குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட மேற்படி பணியாளருக்கு முறையீட்டு மனுதாரரால் (தமிழ் நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம் பெயரில்) அனுப்பப்பட்ட 30.10.2017 நாளிட்ட கடித நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இது குறித்து இம்முறைமன்ற நடுவம் மேற்படி முறையீட்டு மனுதாரர் மற்றும் சங்கம் தொடர்பான சில விவரங்கள் கோரி 06.11.2017ல் ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரது 18.11.2017 நாளிட்ட மின்னஞ்சல் மற்றும் விளக்க கடிதத்தில் உரிய விளக்கங்கள் வரப்பெற்றன. மேற்படி மின்னஞ்சலில் திரு. ந. ஞானமணி தனது சங்கத்தில் இணைச் செயலாளராக இருந்ததாகவும் அவரது முறைகேடான செயல்பாடுகளால் அவர் சங்க பிரதிநிதி பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவம் 02.11.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி 19.12.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முன்னாள் உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரும், தற்போது செங்கம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு. க. கோபால் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

**"... நான் உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலராக இருந்த போது உயர்நீதி மன்ற ஆணையின்படி தமிழகம் முழுவதும் சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வந்தது. பணி முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு நாளும் புகைப்படத்துடன் அறிக்கை வழங்க வேண்டுமென உதவி இயக்குநரகத்தால் ஆணையிப்பட்டிருந்தது. திரு. ஞானமணி தினமும் வந்து புகைப்படத்தினைப் பெற்று உதவி இயக்குநர் ஆலுவலகத்தில் சமர்ப்பிக்காமல் ஒரே இடத்தில்**

இருந்து எடுக்கப்பட்ட ஒரே புகைப்படத்தை 5 நாட்களாக தொடர்ந்து அனுப்பி இருந்தார். இந்த குறைகள் சுட்டிக் காட்டப்பட்டது. ஒரு நாள் துப்புரவு பணியாளர் திரு. ஞானமணி, திரு. ராஜா என்பவருடன் தெருவில் சண்டை போட்டுக் கொண்டிருந்தது குறித்து பொதுமக்களிடமிருந்து தகவல் வரப்பெற்றது. இது போன்ற ஒழுங்கீன நடவடிக்கைகள் அதிகரித்து வந்ததால் அவரை தற்காலிக பணி நீக்கம் செய்தேன். பின்னர் அவரது குடும்ப சூழ்நிலை மற்றும் தனியரது வேண்டுகோளை ஏற்று அவரை பணியில் சேர்த்துக் கொண்டேன். அப்போது ஏற்பட்ட மனவருத்தத்தில் இவ்வாறு மனு அனுப்பி உள்ளார். பொருட்கள் தேவைப்பட்டியலில் கூறப்பட்டுள்ள பொருட்களை துப்புரவு மேற்பார்வையாளரே பெற்றுக் கொண்டு கையொப்பமும் இட்டுள்ளார்…".

முறையீட்டு மனுதாரர் திரு. ராஜவேலு ஒரு சங்கப் பிரதிநிதியாக, சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள பணியாளர்கள் (வரித்தண்டலர், துப்புரவு பணியாளர்கள்) பணிபுரியும் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு சென்று பணம் (சந்தா) வசூலிப்பார் எனவும் அவர் உதயேந்திரம் பேரூராட்சிக்கு வந்தபோது தான் இல்லை என்பதாலும், பணம் வசூலிக்க இயலாமல் போனதாலும் தன் மீது அவருக்கு வருத்தம் ஏற்பட்டிருக்கலாமெனவும் தெரிவித்துள்ளார். மனவருத்தத்தின் பேரில் ஆதாரமற்ற புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதை தள்ளுபடி செய்திடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குறிப்பிட்டவாறு அனைத்து விசாரணை நடவடிக்கைகள், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்ததில் புகாரில் கூறப்பட்ட பொருட்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பணியாளரான திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதும், பயனீட்டுச் சான்று அளிக்கப்பட்டுள்ளதும் உறுதியாகிறது. இந்நிலையில் மனுவில் கூறப்பட்ட புகார்கள் நிரூபணமற்றதென ஊர்ஜிதமாகிறது.

இவ்வினத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பணியாளர் தனது வெறுப்பினையும், கோபத்தையும் வெளிக்காட்ட வடிகாலாக சங்கம் என்ற ஒரு அமைப்பினை நாடியுள்ளது அவரது வாக்குமூலத்தின் மூலமே நன்கு புலனாகிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக சீர்கேடு, ஊழல் மற்றும் நிதி இழப்பு தொடர்பான விசாரணைக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் மற்றும் விதிகளுக்கு மாறாக தனி நபர்களது விருப்பு, வெறுப்புகளை சங்கம் என்ற பெயரில் முன்னெடுத்து கால விரயம் ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல எனவும் இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது.

மேலும், இவ்வினத்தில் கண்டறியப்பட்ட அனைத்து முரண்பாடுகளுக்கும் பொறுப்பான திரு.ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளரை இம்முறைமன்ற நடுவம் கடுமையாக எச்சரித்து மேல் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. சி. ராஜவேலு,
   எச். 4, பாலார் கார்டன்,
   சத்துவாச்சாரி, வேலூர் – 632 009.

2. செயல் அலுவலர்,
   உதயேந்திரம் பேரூராட்சி, வேலூர் மாவட்டம்.

3. திரு. ந. ஞானமணி,
   துப்புரவு மேற்பார்வையாளர்,
   உதயேந்திரம் பேரூராட்சி, வேலூர் மாவட்டம்.

4. திரு. க. கோபால், செயல் அலுவலர்,
   செங்கம் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

5. திரு. எஸ். ஒய். நிஷாத், செயல் அலுவலர்,
   பள்ளிகொண்டா பேரூராட்சி,
   வேலூர் மாவட்டம்.

<u>நகல்</u>

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   வேலூர் மண்டலம்.

2. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்
   சென்னை – 600 108.